செ.வெ.எண்:173 நாள்:15.03.2018

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான குறை கேட்பு கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

----

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாற்றுத்திறனாளிகளுக்கான குறை கேட்பு கூட்டம் இன்று (15.03.2018) நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு மாற்றுத்திறனாளிகளிடம் அடையாள அட்டை வேண்டுதல், பேரூந்து பயண அட்டை வேண்டுதல், வீட்டு வசதி வேண்டுதல், இலவச வீட்டுமனை பட்டா வேண்டுதல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது:-

தமிழக அரசு மாற்றுத்திறனாளிகளுக்கு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது திருநெல்வேலி மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு அரசின் திட்டங்கள் அனைத்தும் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாற்றுத்திறனாளிகள் வந்து செல்ல வசதியாக மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சாய்வு தளம் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான கழிப்பிட வசதி அமைக்கப்பட்டுள்ளது. இது போலவே திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்கள், பள்ளிகள் மற்றும் பேருந்து நிலையம் உள்ளிட்டவைகளில் மாற்றுத்திறனாளிகள் வந்து செல்ல வசதியாக கைபிடி உடன் சாய்வு தளம் அமைத்தல், மாற்றுத்திறனாளிகளுக்கான கழிப்பிடம் அமைத்தல் உள்ளிட்டவைகளை குறித்து பொதுப்பணித்துறையின் மூலம் கணக்கெடுப்பு செய்யப்பட்டு அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் மாற்றுத்திறனாளிகளுக்கு வீட்டுமனை பட்டா மற்றும் இந்திரா நினைவு குடியிருப்பு திட்டத்தில் தனி வீடுகள் கட்டிதரவும் நடவடிக்கை எடுக்கப்படும். மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை மற்றும் அடையாள அட்டை வேண்டி பெறப்பட்டுள்ள விண்ணப்பங்களின் மீது விரைந்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். என பேசினார்.

இக்கூட்டத்தில் திருநெல்வேலி கோட்டாட்சியர் திருமதி.மைதிலி, சமூக பாதுகாப்பு திட்ட தனித்துணை ஆட்சியர் திரு.சங்கரலிங்கம், துணை ஆட்சியர்கள் (பயிற்சி) திருமதி.மயில், செல்வி லட்சுமி பிரியா மற்றும் அலுவலர்கள் மாற்றுத்திறனாளிகள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.